சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 330 / 2017

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 17.11.2021 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : கதிர்வேல் | | கிராமம் | : |
| த/பெ : மாரியப்பன் | | வட்டம் | : |
| மதம் : | | தொழில் | : |
| ஜாதி : | | வயது | : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல்தகவல் அறிக்கை உண்மைநகல் - ம.சா.ஆ.1

2) தீபன் மருத்துவமனை விடுவிப்புச் சான்று அசல் - ம.சா.ஆ.2

3) மருத்துவ பில்கள் அசல் - ம.சா.ஆ.3

4) தீபன் மருத்துவமனை விடுவிப்புச் ாசன்று அசல் - ம.சா.ஆ-4

5) மருத்துவ பில்கள் அசல் - ம.சா.ஆ.5

6) மருத்துவரின் பரிந்துரை குறிப்பு அசல் - ம.சா.ஆ.6

7) ஜிப்மர் மருத்துவமனை சிகிச்சை குறிப்பு அசல் - ம.சா.ஆ.7

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

மேற்படி ம.சா.ஆ.3 மற்றும் 5 எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை

சம்பவ சமயத்தில் நான் இருசக்ரக வாகனத்தை ஓட்டிச்சென்றேன். நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரை இந்த வழக்கில் தரப்பிரனராக சேர்க்காததால் வழக்கு குறைபாடு உடையது தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல. எனக்கு ஓட்டுநர்உரிமம் உள்ளது. அந்த ஓட்டுநர்உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தான் ஓட்டுநர்உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டத் தெரியாமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால்சரியல்ல. இந்த விபத்திற்கு முழுக்காரணமும் நான்தான என்றும் நான் சரியாக கவனமாக வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால்சரியல்ல.

எனக்குஏற்பட்டது சொற்ப காயங்கள் அவை பரிபூரணமாக குணமாகிவிட்டது என்றால்சரியல்ல. ரூ.3,00,000 மருத்துவ செலவாதனதாக அதிக நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்கா க மிகைப்படுத்தி சொல்லியயுள்ளேன் என்றால்சரியல்ல. மருத்துகூமனை நிர்வாகத்தை விசாரித்தால் தான் நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களின் உண்மைதன்மை தெரியவரும் என்றால்சரியல்ல. மருத்துவ பில்கள் என்னால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்களும் மருத்துவ பில்களும் மருத்துவரின் பரிந்துரைக் குறிப்பும் ஒன்றுக்கொன்று முரன்பட்டதாக உள்ளது என்றால்சரியல்ல. நான் விபத்திற்கு முன்பு பார்த்தவேலையை தற்போது பார்த்துவருகிறேன் என்ாறல் சரியல்ல. திருச்சியில் பெயிண்ட் கடையில் விற்பனையாளராக வேலைப்பார்த்து மாதம்ரூ.25,000 சம்பாதித்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. எனது வயது தொழில் வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய எந்தவித ஆவணங்களும் தாக்ல செய்யவில்லை என்றால்சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டர் தெரியாமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்திக் கொண்டதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் எனக்கு நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால்சரியல்ல. நான்கோரியுள்ள நஷ்டஈடு மிகஅதிகம்அது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால்சரியல்ல.

ஒம்/கதிர்வேல்

ஒம்/M.சண்முககனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.